**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**CC.No.175 OF 2024**

PW-3

| | | | |
|---|---|---|---|
| Name | பூபதி(PW3) | | |
| Father's Name | அசோகன் | தொழில் | |
| Village | புலுவப்பட்டி | | |
| Taluk | அவிநாசி | Age | 43 |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th **day of July 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு சொந்தமாக ஃபர்னிச்சர் கடை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 18.05.2023 தேதி காலை 9:30- 10.00 மணி அளவில் கடையை திறப்பதற்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அருகே நடந்து வந்து கொண்டிருந்தபோது ஒரு இருசக்கர வாகனத்தில் அடிபட்டு ஒரு நபர் கீழே விழுந்து கிடந்தார். அவரை நாங்கள் தூக்கி உட்கார வைத்து ஆம்புலன்ஸ் வரவழைத்து அவரை சிகிச்சைக்காக அனுப்பி வைத்தோம். அடிபட்ட நபர் எங்கள் வீட்டிற்கு அருகில் குடியிருந்து வந்தவர் என்பதால் தெரிந்த நபர்களுக்கு சொல்லி அவர்களது வீட்டிற்கு தகவல் சொன்னோம். அடிபட்டவர் வீட்டில் இருந்து ஆட்கள் வந்ததும் நாங்கள் ஆம்புலஞ்சில் அனுப்பி வைத்து விட்டோம். அடிபட்ட நபர் பெயர் மோகன் ஆகும். விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் அந்த இடத்தில் இருந்தார். நான் அவரை பார்த்தேன். அவரை தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். அந்த நபர் ஆஜர் எதிரிதான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

விபத்தில் அடிபட்டு இறந்த நபர் எனக்கு தெரிந்த நபர் என்றால் சரிதான்.புகார் கொடுப்பதற்காக நான் காவல் நிலையம் செல்லவில்லை. அடிபட்டு இறந்த நபர் எனக்கு தெரிந்த நபர் என்பதால் நான் அவருக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |